வாழப்பாடி ஒன்றியம், அத்தனூர்பட்டி ஊராட்சி/வேட்டைக்காரனூர் கிராமம் மன்ற தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை:- திரு.A.பாரதிராஜா

செ.மு.ந.க.எண்.001/2023-24 நாள்.19-02.2024

பொருள்: மனைப்பிரிவு - நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அலுவலகம் - சேலம் மாவட்டம்/வாழப்பாடிவட்டம்-வாழப்பாடி ஊராட்சிஒன்றியம்-அத்தனூர்பட்டி ஊராட்சி/வேட்டைக்காரனூர் கிராமம் ச.எண்39/4D1A, 4D1B, 4D2, 5B-இல் ஏக்.5.84 செண்ட் (அல்லது) 23,633.64 ச.மீ பரப்பில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்பதல் வழங்கப்பட்டதின் உள்ளாட்சி - ஒப்புதல் வழங்கி ஆணைபிறப்பித்தல் - தொடர்பாக

பார்வை:

1.நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கைக் கடிதம் ந.க.எண்.19799/2020 போ, நாள்.24.12.2020.

2.அரசாணை எண்.138, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள்.04.06.2004.

3.அரசாணை எண்.79, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள்.04.06.2017.

4. அரசாணை எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.04.02.2019 மற்றும் அரசாணை எண்.16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.31.01.2020.

5.அரசாணை எண்.141, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை ந.வ.4(1) நாள்.23.09.2020.

6.அரசாணை எண்.181, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை ந.வ.4(1) நாள்.09.12.2020.

7.அரசு கடிதம் எண்.19113/நவ 4(3)2017-வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள்.30.08.2017.

8.நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்./3686 /2017/LA1 நாள்.08.09.2017.

9.நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், மாவட்ட ஊரமைப்பு அலுவலகம் சேலம் அவர்களது உத்திரவு ஆணை ந.க.எண் ROC.NO: SLM/SFTF79A4/9491/2023/TCP.நாள்.25.03.2023

10.வாழப்பாடி ஊராட்சி ஒன்றியம், அத்தனூர்பட்டி ஊராட்சி/ வேட்டைக்காரனூர் கிராமம் மன்ற தலைவர் அவர்களுக்கு வழங்கப்பட்ட ஆவண எண்.1646/2023, நாள்.20.03.2023.

11.தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு (TANGEDCO) வழங்கப்பட்ட ஆவண எண்.1645/2023 நாள்.20.03.2023.

12.அத்தனூர்பட்டி ஊராட்சி, வேட்டைகாரனூர் கிராமம் தீர்மானஎண்.21 (37) நாள்.23-05-2023.

13.சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம் வாழப்பாடி அவர்களின் ந.க.எண்.84/2024, நாள்.06-02-2024,

ஆணை

சேலம் மாவட்டம், வாழப்பாடி ஊராட்சி ஒன்றிம், வாழப்பாடி வட்டம், அத்தனூர்பட்டி ஊராட்சி/வேட்டைக்காரனூர் கிராமம் ச.எண்.39/4D1A, 4D1B, 4D2, 5B-இல் ஏக்.5.84 செண்ட் அல்லது 23,633.64 ச.மீ பரப்பில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு தொழில்நுட்ப வரைபடத்துடன் இணைக்கப்பட்டுள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளின்பேரில் ஒப்புதல் எண்.APPROVAL NO.SWP/DTCP/SALEM, LAYOUT NO.127/2023 என எண்ணிடப்பட்டு தொழில் நுட்ப அனுமதியும், சிறப்பு நிபந்தனைகள் மற்றும் பொது நிபந்தனைகளுடன் திட்ட அனுமதியும் உதவி இயக்குநர். மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், சேலம் அவர்களின் பார்வை(9)-இல் காணும் உத்திரவில் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், பார்வை (10) மற்றும் (11) கண்டபடி உத்தேச மனைப்பிரிவு சாலைகள், மூலை முடக்குகள் மற்றும் பூங்கா பரப்பு 7714.37 ச.மீ மற்றும் பொது ஒதுக்கீடு உபயோக மனை 89.23 ச.மீ ஆகியவை உள்ளாட்சிக்கு தான ஆவணம் எண்.1646/2023, நாள்-20.03.2023-படியும் மற்றும் 96.74 ச.மீ TANGEDCO-க்கு தான ஆவணம் எண்.1645/2023, நாள்-20.03.2023-படியும் தானம் செய்யப்பட்டுள்ளது.

பார்வை (13) - இன்படி, இம்மனைப்பிரிவிற்கு அத்தனூர்பட்டி ஊராட்சி மன்ற தீர்மானம் இயற்றப்பட்டுள்ளளது. மேலும், பார்வை (9) - இல் காணும் உத்திரவில் தெரிவித்துள்ளவாறு, கூராய்வு கட்டணம் ரூ.1000 வீதம் 102 மனைகளுக்கு ரூ.1,02,000/-ம், Layout Account - இல் 16.02.2024 அன்றும், மற்றும் 3 % சந்தை மதிப்பு ரூ.87,600/-(ரூபாய் எண்பத்தேழாயிரத்து அறுநூறு மட்டும்) உரிய அரசுத் தலைப்பில் 14.02.2024 அன்றும் செலுத்தப்பட்டுள்ளது.

எனவே, அத்தனூர்பட்டி ஊராட்சி/வேட்டைகாரனூர் கிராமம் ச.எண்.39/4D1A, 4D1B, 4D2, 5B இல் ஏக்.5.84 செண்ட் அல்லது 23633.64 ச.மீ பரப்பில் அமைந்துள்ள உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப அனுமதி மற்றும் திட்ட அனுமதி பார்வை(9)-இல் காணும் செயலாணையின்படி ஒப்புதல் வழங்கப்பட்டதை தொடர்ந்து வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் தொழில்நுட்ப ஒப்புதல் அளிக்கப்பட்ட கடிதங்களில் உள்ள நிபந்தனைகளின் அடிப்படையில் மேற்படி உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுகளுக்கு கீழ்க்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு ஒப்புதல் வழங்கி ஆணையிடப்படுகிறது.

நிபந்தனைகள்

1. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் இம்மனைகளுக்கு வழங்கப்பட்ட ஒப்புதல் உத்தரவு எவ்வித முன்னறிவிப்பின்றிரத்தாகிவிடும்.

2. மனைப்பிரிவில் அமையப்பெற்றுள்ள கட்டிடங்கள் முறைப்படுத்தப்பட்டதாக கருதப்படாது.

3. மனுதாரரால் செலுத்தப்பட்ட தொகை குறைவு என பின்னர் அறியப்பட்டால் தொகை செலுத்த வேண்டும்.

4. மேற்காணும் மனைப்பிரிவில் வழக்குகள் ஏதும் நிலுவையில் இருப்பின் இந்த ஒப்பதல் ஆணை எவ்வித முன்னறிவிப்பின்றிரத்து செய்யப்படும்.

5. மனைப்பிரிவில் ஒதுக்கப்பட்ட கழிவுநீர் கால்வாய், தார்சாலை பணிகள், தெருவிளக்கு வசதிகள், உறிஞ்சுக்குழி பணிகள் மற்றும் மேல்நிலை நீர்தேக்க தொட்டி பணிகள் முழுமையாக பராமரிக்கப்பட வேண்டும்.

இணைப்பு - வரைபடம்

C. Bhaskar

தலைவர்
ஊராட்சி மன்றம்
அத்தனூர்பட்டி.

வேட்டைக்காரனூர் கிராமம்,
அத்தனூர்பட்டி ஊராட்சி,
வாழப்பாடி ஊராட்சி ஒன்றியம்,
சேலம் மாவட்டம்.

பெறுநர்

திரு.பி.குமார், திருமதி.ஆர்.நிர்மலா, திரு.எம்.சக்திவேல். கதவு எண்.85/84, கடை வீதி, ஏத்தாப்பூர் அஞ்சல், ஏத்தாப்பூர் கிராமம், பெத்தநாயக்கன்பாளையம் தாலுகா, சேலம் - 636 117,

நகல் - நகர ஊரமைப்பு உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், தளவாய்ப்பட்டி அஞ்சல், சேலம் இரும்பாலை மெயின் ரோடு, சேலம் 636 302, தொலைபேசி 0427 - 2448625 அவர்களுக்கு தகவலின் பொருட்டு அனுப்பப்படுகிறது.

நகல் - வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), வாழப்பாடி,

நகல் - சார் பதிவாளர், வாழப்பாடி.

நகல் - வட்டாட்சியர், வாழப்பாடி.